சுற்றுநிருபம் : **10/2008**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வட மாகாணம்.
26.06.2008

வடமாகாணத்திலுள்ள
சகல கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்

சம்பள மீளாய்வு 66/2006

மேற்படி விடயம் தொடர்பாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு வடக்கு கிழக்கு மாகாணம் அவர்களின் 66/2006 இலக்க 19.12.2006 ம் திகதிய சுற்றுநிருபத்தின்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

குறித்த சுற்றுநிருபத்தின் திருத்தமாக "சம்பள மீளாய்வு – 2006 திருத்தம்" எனும் தலைப்பிட்டு 31.12.2006ம் திகதியிடப்பட்ட இணைப்புக் கடிதம் மேற்படி சம்பளத்திட்டத்தினை நடைமுறைப் படுத்தும் போது சம்பள அளவுத்திட்டத்தில் பல முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளதைக் கருத்தில் கொண்டு 01.01.2007ம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் இரத்துச்செய்யப்படுகிறது.

எனவே "சம்பள மீளாய்வு – 2006 திருத்தம்" எனும் இணைப்புக் கடிதத்தின் பிரகாரம் சம்பள அளவுத்திட்டத்தினை நடைமுறைப்படுத்திய சங்கங்கள் 01.01.2007ம் திகதியிலிருந்து ஊழியர்களது சம்பளத்தினை உரிய முறையில் திருத்தம் செய்து செம்மைப்படுத்த வேண்டும். 01.01.2007ம் திகதிக்குப் பின் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கும் பதவியினை விட்டுச் சென்ற ஊழியர்களுக்கும் பணிக்கொடைச் சென்மதியினையும், சம்பளச் சென்மதியினையும் சங்க ஐந்தொகையில் உட்படுத்த வேண்டும்.

மேற்படி சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பள அளவுத்திட்டம் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதில் வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சிரத்தை கொண்டுள்ளது.

66/2006ம் இலக்கச் சுற்று நிருபத்தின் 09ம் பிரிவின் இரண்டாவது பந்தியில் குறிப்பிட்டவாறு மாற்றியமைக்கப்பட்ட சம்பள விபரங்களை அட்டவணைப்படுத்தி அனுப்பி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறும், அவ்விபரத்தின் பிரதியினை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வட மாகாணத்திலுள்ள சங்கங்களிலிருந்து இவ்வாறான சம்பள விபரங்களின் அட்டவணை சிலவே இதுவரை கிடைத்துள்ளன. ஆகவே பொதுவாக நோக்கும் போது இச்சம்பளத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் சங்கங்கள் போதுமான அளவுக்கு ஊக்கம் காட்டவில்லை என்பதை அறியக் கூடியதாக உள்ளது. சங்க ஊழியர்களிடமிருந்து மேற்படி சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லையென பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 01.01.2007ம் திகதிக்குப் பின் ஓய்வு பெற்றவர்களின் சம்பள நிலுவை, பணிக்கொடை கணிப்பீடுகள் பற்றிய முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

66/2006ம் இலக்க சுற்றுநிருபம் சகல சங்கங்களினாலும் 01.01.2007ம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சங்க நிதி நிலைமை சரியில்லை எனக் காரணம் காட்டி நடைமுறைப்படுத்துவதனை தாமதிக்க முடியாது. 01.01.2007ம் திகதி தொடக்கம் ஓய்வு பெறுவோருக்கும், பதவியினை விட்டுச் செல்லும் தகுதிவாய்ந்த ஊழியர்களுக்கும் இவ்மீளாய்வு செய்யப்பட்டு பணிக்கொடை, நிலுவைச் சம்பளக் கொடுப்பனவு வழங்க வேண்டும். இவ்விடயங்களைச் செய்யாது தாமதிப்பது அல்லது தடை செய்வது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 1972ம் ஆண்டு 12ம் இலக்கச் சட்டத்தின் 35ம் பிரிவின் கீழும், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி (141) உட்பிரிவின் கீழும் குற்றமாகக் கருதப்பட்டு இந்நடவடிக்கைக்கு பொறுப்பாளிகளான எல்லா ஆட்களுக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

2008.06.20 ந் திகதிய ஆணைக்குழு கட்டளைப்படி.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

P. VAGESHAN
Secretary
Co-operative Employees Commission
Northern Province

பிரதி :

01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
02. வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.
03. வட மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்களுக்கும்